பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 20 ஞாயிற்றுக்கிழமை 07.12.2025 | அதிர்வு 130

## பிக்கப் மோதி குடும்பப் பெண் பரிதாபப் பலி!

### மட்டக்களப்பில் துயரம்

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கீழுள்ள தாமரைக்கேணி பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# சுனாமியை விட டித்வா புயலால் 3 மடங்கு இழப்பு

### அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

டித்வா புயலால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு சுனாமியால் ஏற்பட்டதை விட மூன்று மடங்கு அதிகம் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“அண்மையில் ஏற்பட்ட டித்வா புயலால் கிட்டத்தட்ட 6 முதல் 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை 03



# இராசதுரை காலமானார்

முன்னாள் இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சரும் தந்தை செல்வாவால் அரசியலுக்குள் அழைத்து வரப்பட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் மிக நீண்ட காலம் முக்கிய தலைவராக விளங்கியவருமான செல்லையா இராசதுரை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 98.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சென்னையில் நடைபெறுகின்றன.

1927 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பு நகர் புளியந்தீவில் பிறந்தவர் செல்லையா இராசதுரை. 03

# பேரிடர் சாவு எண்ணிக்கை 627 ஆக உயர்வு 21 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு



இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் இதுவரையில் மொத்தமாக 627 பேர் உயிரிழந்துள்ளதுடன் 190 பேர் காணாமல்போயுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று நண்பகல் 12 மணிக்கு வெளியிட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டங்களைப் பொறுத்தவரை, அதிகளவான உயிரிழப்புகளைப் பதிவு செய்த மாவட்டங்களாக கண்டி (232), பதுளை (90), நுவரெலியா (89), 03



# தமிழரசு-சங்கு யாழில் சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களுக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுக் கும் இடையில் யாழ்ப்பாணத்தில் இன்று சந்திப்பு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் – மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இந்தச் சந் திப்பு இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இணைந்த செயற்பாட்டைக் கருத்தில்கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அழைப்பின் பேரில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தக் கலந்துரை யாடலில் பங்கேற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழர சுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந் திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலை வர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், முருகேசு சந்திரகுமார், சி.ரவீந்திரா மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் பொதுச்செயலா ளர் நா.இரட்ணலிங்கம் ஆகியோர் பங் கேற்றனர்.







# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சுனாமியை விட...

இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று முதற்கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இது ஒரு தோராயமான மதிப்பீடு மட்டுமே. பொருளாதார மீட்புத் திட்டத்தை வகுக்க சரியான பேரிடர் மதிப்பீடு பின்னர் மேற்கொள்ளப்படும்.

2004 ஆம் ஆண்டு சுனாமியினால் ஏற்பட்ட பொருளாதார சேதம் 1.5 முதல் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை மட்டுமேயாகும்.

ஆனால், இது சுனாமியால் ஏற்பட்ட சேதத்தை விட மூன்று மடங்கு அதிகம்.” – என்றார்.

### இராசதுரை...

மட்டக்களப்பு அரசடி வித்தியாலயத்தில் (தற்போது மகாஜனக் கல்லூரி) ஆரம்பக் கல்வியை முடித்து, பின்னர் மெதடிஸ்த மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியை முடித்தார். இராசதுரை ஊடகவியலாளராக ‘சுதந்திரன்’ பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக முதன்முதலாக தந்தை செல்வாவால் நிறுத்தப்பட்டு, மட்டக்களப்பு தொகுதியில் 1956 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

தொடர்ந்து மார்ச் 1960, ஜூலை 1960, 1965, 1970 தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்ததை அடுத்து 1977 தேர்தலில் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1979 பெப்ரவரி 10 இல் இவர் தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். இவரை ஆளும் கட்சியில் இணைப்பதற்காக 1979 பெப்ரவரி 22 இல் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட்டு, 1979 மார்ச் 7 இல் ஜே. ஆர். ஜெயவர்தனா தலைமையிலான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். இதற்காக அவருக்கு இந்து சமய, பண்பாட்டு, தமிழ் அமுலாக்கல், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கியதும் பின்னர் இவர் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டு மலேசியா சென்றார்.

பணியில் இருந்து இளைப்பாறிய பின்னர் புலம் பெயர்ந்து மலேசியாவில் சில காலம் வாழ்ந்து பின்னர் சென்னையில் வசித்தார்.

இராசதுரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் 1967 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது முதல்வராக ஓராண்டு காலத்திற்குப் பதவியில் இருந்தார்.

ஏறக்குறைய 33, வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக வடகிழக்கில் தொடர்சியாக மக்களால் தெரிவானவர் இவர் மட்டுமே.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது மேயரும் இவரே.

1973, செப்டம்பர், 07 இல் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் செல்லையா இராசதுரையும் அ.அமிர்தலிங்கமும் தலைவர் பதவியைப் பெறுவதற்காகப் போட்டி நிலை உருவான வேளையில் தந்தை செல்வா தலையிட்டு இருவரையும் சாந்தப்படுத்தி, செல்லையா இராசதுரையை விட்டுக் கொடுக் கொடுக்குமாறு கூறி அ.அமிர்தலிங்கத்தைத் தலைவராகத் தெரிவு செய்தார்.

1977, ஜூலை,21 இல் இறுதியாக நடைபெற்ற தொகுதிவாரியான தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியில் மட்டக்களப்பு இரட்டைஅங்கத்தவர்தொகுதியில் இவரைத் தோற்கடிக்க கவிஞர் காசி ஆனந்தனை இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளராகவும், செல்லையா இராச துரையை தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் போட்டியிட வைத்தபோதும் இவரே வெற்றி பெற்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை விட்ட பொறுப்பற்ற செயலால் இருவரை வேட்பாளராக நிறுத்திய போதும் செல்லையா இராசதுரையே வெற்றிபெற்றார். அவர் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை தமக்குத் துரோகம் செய்ததாகக் கூறிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து இந்து கலாசார அமைச்சர் பதவி பெற்றார்.

இவர் எழுதிய நூல்கள்:

- ராசாத்தி – குறும் புதினம் – 1982
- பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் – சொற்பொழிவுகளின் தொகுப்பு
- அன்பும் அகிம்சையும் – தேசிய ஒற்றுமைக்கு வழி – 1984
- மிஸ் கனகம் – சிறுகதைத் தொகுப்பு
- இலங்கையில் மகா அஸ்வமேதயாகம்

### பேரிடர்...

மற்றும் குருநாகல் (61) ஆகியவை காணப்படுகின்றன.

அத்துடன், நாட்டின் 25 மாவட்டங்களைப் பாதித்த இந்த அனர்த்தங்களால் மொத்தமாக 6 இலட்சத்து 11 ஆயிரத்து 530 குடும்பங்களைச் சேர்ந்த 21 இலட்சத்து 79 ஆயிரத்து 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தங்களால் 4 ஆயிரத்து 517 வீடுகள் முழுமையாகவும், 76 ஆயிரத்து 66 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்துடன், அனர்த்தம் மற்றும் அனர்த்த அபாயம் காரணமாக இடம்பெயர்ந்த 89 ஆயிரத்து 857 பேர் நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள 956 மையங்களில் தங்கியுள்ளனர்.

### பிக்கப் மோதி...

குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

46 வயதுடைய மேற்படி பெண் தனது 10 வயது மகனுடன், அவருடைய சகோதரியின் மோட்டார் சைக்கிளின் பின் பக்கத்தில் இருந்து பயணித்த வேளை, வேகமாக வந்த பிக்கப் வாகனத்தால் மோதுண்டு சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரது சகோதரியும், மகனும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விபத்தை ஏற்படுத்திய பிக்கப் வாகனத்தைக் கைப்பற்றிய ஏறாவூர் பொலிஸார், பிக்கப் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒன்றுபட்ட முயற்சி

தற்போதைய பேரிடர் புயலால் இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு, 2004 சுனாமியால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்பை விட பத்து மடங்கு அதிகம் என நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இதன் மூலம் ஏற்படும் மொத்தச் சேதம் 2.1 ட்ரில்லியன் டொலரை விட அதிகம் எனப் பூர்வாங்கமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இறுதிச் சேத அறிக்கையைத் தயாரிக்க மேலும் இரண்டு மாதங்கள் தேவைப்படும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையைப் பொறுத்தவரை உயிரிழப்பு சேதங்கள் அதிகம் எனினும், இப்போது அந்தப் பாதிப்பு அத்தகைய மோசமான நிலையில் ஏற்படவில்லை.

ஆழிப்பேரலை ஒரு சில மணி நேரத்துக்குள் பெரும் பொருளாதார அழிவை ஏற்படுத்தியது. அதுவும் அந்த பாதிப்பு நாட்டின் ஒரு பகுதி கடற்கரை பிரதேசங்களுக்கு மாத்திரம் நேர்ந்தது.

ஆனால் இந்தச் சூறாவளி மூன்று நாள்கள் நின்று, நிலைத்து, நீடித்து முழு நாட்டையும் புரட்டிப் போட்டு விட்டே விலகியிருக்கின்றது.

இந்தப் பேரழிவிலிருந்தும் அது ஏற்படுத்தியுள்ள பொருளாதாரப் பின்னடைவுகளிலிருந்தும் நாடு மீண்டெழுவதற்கு நீண்ட காலம் பிடிக்கும்.

ஏற்கனவே நாடு எதிர் கொண்டிருக்கும் பொருளாதார பின்னடைவுகளோடு இந்த பாதிப்பும் சேர்ந்திருப்பதால் முழு நாடும் மிக இக்கட்டான நெருக்கடி காலத்தை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

இந்த நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் அரசியல், பொருளாதார தந்திரோபாயங்கள் குறித்து நாடும் மக்களும் அரசியல் தலைவர்களும் தீர்க்கமான சில முடிவுகளை எடுக்க வேண்டி இருக்கும்.

அந்த முடிவுகளை நோக்கி நாட்டை வழிநடத்தும் பொறுப்பு தற்போதைய அரசுத் தலைமைக்கு உள்ளது.

இந்த விடயத்தில் தனி நபர்கள், தனிக் கட்சிகள், தனித் தரப்புகள் என்று விவகாரங்களைக் கையாண்டு தீர்மானிக்காமல், ஒரு நாடாக ஒன்றுபட்டு எழுந்து நின்று இந்தப் பிரச்சினையை - இப்போது ஏற்பட்டுள்ள பாதிப்புகளை - பின்னடைவுகளை - எதிர்கொள்வதற்கு நாடு தயாரானால் மட்டுமே இதனைச் சமாளிக்க முடியும்.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து நாட்டைத் தூக்கி நிறுத்துவதற்கான ஒன்றுபட்ட வழிகாட்டலை இன்றைய அரசு தலைவர் அநுர குமார திஸநாயக்கா முன்னெடுத்துச் செல்வாரா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

தமது கட்சி, தமது கூட்டு என்ற குறுகிய வட்டத்திற்குள் அவர் நிற்பாராயின் இந்த மோசமான நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கான காத்திரமான வழிவகைகளைக் கண்டுபிடித்துச் செயல்படுத்துவது சாத்தியமற்றதாகிவிடும்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தாம் ஆற்றிய உரையில் அத்தகைய ஐக்கியத்துக்கு அவர் அழைப்பு விடுத்திருக்கின்றார். வெறும் அழைப்பு மட்டும் போதுமானது அல்ல. அதையும் தாண்டி, சகல தரப்பினரையும் ஒன்றுப்படுத்தி, நெருக்கடி காலத்தை எதிர்கொள்வதற்கான ஐக்கிய வழிப்படுத்தலில் அவர் காத்திரமாகச் செயல்பட வேண்டும். செய்வாரா? பார்த்திருப்போம்.

# பஸ் சேவைகள் தொடர்ந்தும் பாதிப்பு



நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பல பகுதிகளில் பஸ் சேவைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

குறிப்பாக வலப்பனை, நுவரெலியா, கம்பளை மற்றும் நாவலப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சுற்றியுள்ள பல வீதிகளில் பஸ் சேவைகள் தடைப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் செயற்பாடு பிரதிப் பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.டி. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளால், பல வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளதால், பஸ் சேவைகளை முன்னெடுப்பதில் தடை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை பதுளை, மாவனெல்ல, மற்றும் கேகாலை உட்பட பல பகுதிகளிலும் 153 பஸ்கள் சேவையில் ஈடுபட முடியாமல் உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே. நாடு முழுவதும் மொத்தம் 7 ஆயிரத்து 332 பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்றும் பி.எச்.ஆர்.டி. சந்திரசிறி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தெஹிவளை துப்பாக்கிச்சூடு: சந்தேகநபர் ஒருவர் சிக்கினார்

தெஹிவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளை- "ஏக்வாடஸ்" விளையாட்டு மைதானம் அருகே நேற்று துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 34 வயதுடைய இளைஞர் ஒருவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# 13 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு!

இலங்கையின் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா, பதுளை, குருநாகல், இரத்தினபுரி, கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, மொனராகலை உள்ளிட்ட 13 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு சிவப்பு நிற அதி அபாய மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

அத்துடன், பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மல்வத்து ஓயாவின் நீர்மட்டம் எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடைந்துள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, குறித்த ஆற்றை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# மண்சரிவு அபாயத்தையடுத்து சில குடும்பங்கள் வெளியேற்றம்

கேகாலை மாவட்டத்தில் உள்ள ருவன் வெல்ல, ரத்தகல மற்றும் ஹட்டனில் உள்ள ரோசெல்ல மாணிக்கவத்த காலனியில் வசிக்கும் பல குடும்பங்கள் மண்சரிவு அபாயம் காரணமாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளன.

அதன்படி, ருவன்வெல்ல, ரத்தகல பகுதியில் உள்ள 11 குடும்பங்கள் ரத்தகல ஆரம்பப் பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதேபோல், ரொசெல்ல மாணிக்கவத்த காலனியில் உள்ள 13 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் வெலிஓயா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



# சகல அரச அறிவிப்புகளும் மும்மொழிகளில் கட்டாயம்

## உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன வலியுறுத்து



அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், கடிதங்கள் மற்றும் அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்று உள் நாட்டலுவல்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதைய, அதிதீவிர காலநிலை காலப் பகுதியிலும் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களின் அறிவித்தல்கள் அனுப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்கள் வினவிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய, ஊவா மாகாணம் உள்ளிட்ட தமிழர்கள் செறிந்து வாழும் அனைத்து பகுதிகளிலும் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்புகள் விடுக்கப்படுகின்றமை தொடர்பில் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், ஊடகங்கள், அமைச்சரைத் தொடர்பு கொண்டு வினவியது.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர், மும்மொழிக் கொள்ளையைப் பின்பற்றுமாறு அனைத்து அரச அலுவலகங்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

எனினும், கடந்த நாட்களில் அதனைப் பின்பற்றியிருக்கவில்லை என்றால் அது குறித்து ஆராய்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் விடுத்து உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அதற்கமைய நாளை முதல் அனைத்து அரச அலுவலகங்களிலும் வெளியிடப்படும் அறிவித்தல்கள், மும்மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்பது தொடர்பில், தாம் பணிப்புரை விடுப்பதாகவும் அமைச்சர் சந்தன அபேரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# பேரிடர் அலட்சியப்போக்கு: அரசுக்கு எதிராக வழக்கு!

## முன்னாள் அமைச்சர் கம்மன்பில திட்டவட்டம்



பேரிடர் தொடர்பில் அலட்சியப் போக்குடன் செயற்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தற்போது தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், தந்திரோபாயமான முறையிலேயே வழக்குத் தொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் கிடைத்தும், உரிய நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே பாரிய அழிவு ஏற்பட்டது. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பேரிடரின் போதும் அலட்சியப்போக்குடன் செயற்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை ஏற்பட்ட இழப்பை விடவும் ஆயிரம் மடங்கு இழப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

பெலவத்தையில் (ஜே.வி.பி. தலைமையகம்) நிதி உள்ளது. இது இழப்பீடுக்கு வழங்கப்பட வேண்டும். அமைச்சரவையும் பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சர்களின் நிதியும் வழங்கப்பட வேண்டும். தமது தவறை அரசாங்கம் ஏற்கவேண்டும்.

அவ்வாறு இல்லையேல்தான் நாம் சட்ட நடவடிக்கையில் இறங்குவோம். எமது சட்டத்தரணிகள் இது பற்றி ஆராய்ந்து வருகின்றனர்." – என்றார்.




# நன்நீர் மீன்களுக்கான கிராக்கி அதிகரிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மீன்பிடி குறைவடைந்துள்ளது. மக்களின் மீன் பாவனைக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் கடல் சீற்றம் காரணமாக கடல் மீன்களின் விலையும் தற்போது அதிகரித்துள்ளது. இதனால் நன்னீர் மீன்களுக்கான கிராக்கி தற்போது அதிகரித்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் நன்னீர் மீன்பிடியாளர்களது வருமானம் அதிகரித்து வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை படுவான்கரை பகுதியிலும் அதிக அளவிலான நன்னீர் மீன்பிடியாளர்கள் நன்நீர் மீன்களை விற்பனை செய்தனர்.

அதில் கோல்டன், கெழுத்தி, செத்தல், முண்டான், ஒட்டியான், சுங்கான், சள்ளல், போன்ற மீன் இனங்களை விற்பனை செய்வதை காணக்கூடியதாக இருந்தது.

ஒரு கிலோ மீன் 800 ரூபா தொடக்கம் ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

# மன்னாரில் நிவாரண உதவிகளை வழங்குவோருக்கு விசேட அறிவித்தல்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு உதவிகள் இன்னும் கிடைக்கப்பெறாமலும் பல கிராமங்களுக்கு திருப்ப திருப்ப பல்வேறு உதவிகள் கிடைக்கப் பெறுவதாலும் மன்னார் மாவட்ட செயலகத்தால் ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னர் மாவட்டமானது தற்போது இடம்பெற்ற பேரிடரின்போது பாரிய அளவில் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகும்.

பல மக்கள் தாங்களாகவே முன்வந்து பல்வேறு வகையில் நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

எனினும் மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு உதவிகள் இன்னும் கிடைக்கப்பெறாமலும் பல கிராமங்களுக்கு திருப்பத் திருப்ப பல்வேறு உதவிகள் கிடைக்கப் பெறுவதும் நாம் அறியக்கூடிய வகையில் உள்ளது.

எனவே மன்னாரில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் அதற்காக இணைப்பு அலுவலர்களை நியமித்துள்ளோம்.

எனவே உதவிகளை மேற்கொள்பவர்கள் கீழ் குறிப்பிடப்படுவோருடன் இணைந்து செயற்படும் போது பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணம் சென்றடைவதை நாம் உறுதிப் படுத்திக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதோடு பல்வேறு நடைமுறை சிக்கல்களையும் தவிர்த்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு மன்னார் மாவட்ட செயலகத்தில் றொகன் குரூஸ் – பிரதித் திட்டமிடல் பணிப்பளர் – 0770027602, 023 2222235, மன்னார் நகரம் – ஜூட் மைக்கல் ராஜ் – உதவி திட்டமிடல் பணிப்பளர் – 0770585816, மாந்தை மேற்கு – டிலைக்சன் – உதவிப் பிரதேச செயலாளர் – 0779949604, மடு – கிளரன்ஸ் – அபிவிருத்தி உத்தியோகத்தர் – 0766949864, முசலி – இர்பான் – அனர்த்த நிவாரண உத்தியோகத்தர் – 0758422870, நானாட்டான் – திருமதி மலர்விழி – நிர்வாக அலுவலர் – 0776333634 ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி தங்கள் உதவிகளை முன்னெடுக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறவன்புலோவில் தற்காலிக குடிசைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு நில விரிப்புகள்

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மறவன்புலோ கிராமத்தில் தற்காலிக குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு நிலவிரிப்பு மற்றும் தறப்பாள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிராமத்தின் சமுக மட்ட அமைப்புக்களுடைய கோரிக்கைக்கு அமைவாக கிராம அலுவலர் பவித்திரா நேரில் சென்று நிலைமைகளை அவதானித்து மேற்படி உதவித் திட்டங்களை வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் இடி மின்னல் தாக்கியதால் பகுதியளவில் சேதமடைந்த தேவாலயம்



(பூ.லின்ரன்)

யாழில் நேற்றிரவு இடி மின்னல் தாக்கத்தால் தேவாலயம் ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/187 சங்குவேலி கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்திலேயே இந்த இடிமின்னல் தாக்கம் இடம்பெற்றது.

இந்த இடி மின்னல் தாக்கத்தால் உயிர்ச்சேதங்கள் எவை யும் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மூதூரைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழுங்குங்கள்

**மூதூர் பிரதேச செயலாளருடனான கலந்துரையாடலில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.**



மூதூர் பிரதேசத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இன்று ஞாயிற்றுக்கிழமை மூதூர் பிரதேச செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில், புதிய பிரதேச செயலாளர் அவர்களுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட கலாநிதி ஹிஸ்புல்லாஹ், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாகச் சேதமடைந்த மூதூர் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான அவசர நடவடிக்கைகள் குறித்து விரிவாகப் பேச்சு நடத்தினார்.

இதன்போது அவர், மூதூரை மீண்டும் உயிர்ப்பிக்க 100 கோடி தேவை என்றாலும், நான் ஜனாதிபதியுடன் நேரடியாக பேசிப் பெற்றுத்தருகிறேன். மக்கள் அழிந்துபோய் தவிக்கும் இந்த நிலையை மாற்றவும் மூதூர் பிரதேசத்தை கட்டியெழுப்பவும் ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று பிரதேச செயலாளரிடம் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் உடனடிப் பிரச்சினைகள், குடி தண்ணீர், சுகாதாரம், வீட்டு சேதங்கள், வாழ்வாதார இழப்புகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் இருவரும் ஆலோசனை நடத்தினர்.

# தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கை இல்லை

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை கவலை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

புதிய அரச அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

புதிய அரசு ஊழல்களை ஒழிக்கவும், போதைவஸ்தைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. ஆயினும் தமிழர் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசு இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயம் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர்மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.



இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சி பீடத்தின் ஆதரவாலும் மன்னார் மறைமாவட்டஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மறை மாவட்ட இறைமக்களுக்கு எழுதும், திருவருகைக் காலத் திருமடல் – 2025 இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மடலில் மேலும் குறிப்பிடுகையில்,

திருவருகைக்காலம் இறைப்பற்றும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்பார்ப்பின் காலமாக விளங்குகிறது. இயேசுவின் பிரசன்னத்தை – உடனிருப்பை ஆழமாக உணர்கின்ற ஒரு சிறப்பான சந்தர்ப்பம் இந்தத் திருவருகைக்காலம். ‘கடவுள் நம்மோடு இருக்கிறார்’ என்ற ஆறுதலின் செய்தியை தனது திரு பிறப்பின் மூலம் இறைமகன் இயேசு மீளவும் இந்த நாள்களில் நமக்கு வலியுறுத்துகின்றார்.

எனவே, கடவுளின் உடன் இருப்பையும், அவருடைய அளவு கடந்த அன்பையும் இன்னும் ஆழமாக இந்தக் காலத்தில் உணர்ந்து, இறைமகன் இயேசுவின் வருகைக்கு நம்மைத் தகுந்த முறையில் ஆயத்தம் செய்வோம்.

மன்னார் மறை மாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு – ஆண்டுதோறும் நடைபெறும். மன்னார் மறை மாவட்ட மேய்ப்பு பணி மாநாடு இவ்வாண்டும் கடந்த ஒக்ரோபர் மாதம் 27, 28, 29 ஆகிய தினங்களில் மன்னாரில் சிறப்பாக நடைபெற்றது. 2026 ஆம் ஆண்டு மன்னார் மறை மாவட்டத்தில் தூய ஆவியின் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில்தூயஆவியைமையப் பொருளாக கொண்டு இந்த மாநாடு நடைபெற்றது. குருக்கள், துறவியர், பொது நிலையினர் என ஏறக்குறைய 200 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பங்குகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. தீர்மானங்களை அடியொற்றி ஒவ்வொரு பங்கும், ஆணைக்குழுவும், துறவற இல்லமும் தமது சூழ்நிலை, வசதி, வாய்ப்புகளை கவனத்தில் கொண்டு தமக்கான பிரத்தியேகமான மேய்ப்புப் பணி திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

இந்த மாநாட்டின்போது பங்குகள் ரீதியாக எடுக்கப்படும் தீர்மானங்களையும் உள்ளடக்கியதாக பங்குமட்ட இறுதித் தீர்மானங்கள் அமைய வேண்டும். புதிய ஆண்டின் முதல் நாளில் இருந்து புதிய ஆண்டுக்கான மேய்ப்புப் பணித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மறைமாவட்டம் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் – மன்னார் மறை மாவட்டத்தில் காற்றாலைகளை அமைக்கும் திட்டமும் கனிய மணல் அகழ்வு திட்டமும் பாரிய பிரச்சினைகளாக உள்ளன. மன்னார் தீவில் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ள 30 காற்றாடிகளோடு மேலும் 14 காற்றாடிகள் அமைப்பதற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளது.

ஆயினும் இனிவரும் காலங்களில் மேலதிகமாக காற்றாடிகள் அமைக்கப் படமாட்டாது என்ற உறுதிப்பாட்டை அமைச்சரவைத் தீர்மானமாக நிறைவேற்றி அரசு தந்துள்ளது. எனவே இதனை முன்னிட்டு மன்னாரில் இடம் பெற்றுவந்த மக்களின் தொடர் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

கனிய மணல் அகழ்வு மன்னார் தீவில் முற்றாக இடம்பெறாது என்ற வாக்குறுதியையும் அரசு தந்திருக்கின்றது. கனிய மண் அகழ்வுக்கு நிறுவனங்களின் அலுவலகங்கள் மன்னாரில் இயங்க முடியாது எனவும், கனிய மணல் அகழ்வு ஒருபோதும் நடைபெறாது எனவும் அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றவும் அரசு வாக்குறுதி தந்துள்ளது. அரசு மக்களுக்கு கொடுத்த இந்த வாக்குறுதியை தவறாமல் நிறை வேற்றும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

வரலாறு காணாத வெள்ள அனர்த்தம் – முழு இலங்கை நாட்டையும் உலுக்கிய வெள்ள அனர்த்தம் நம்முடைய மறைமாவட்டத்தையும் வெகுவாக பாதித்துள்ளது. நம் மக்களில் சிலர் தம் இன்னுயிரை இழந்துள்ளனர். பலர் அகதிகளாக்கப் பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து எண்ணில்லாத பொருட்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏராளமான விளைநிலங்கள் அழிவுக்குள்ளாகி உள்ளன. கால்நடைகள் பல இறந்துள்ளன. இந்நிலையில் நிவாரண நடவடிக்கைகள் அரசினாலும் நம் மறை மாவட்ட திருச்சபையாலும் ஏனைய சில பொது அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதிப்புக்கு உள்ளாகாத மக்கள் பெருந்தன்மையோடு உதவிக் கரம் நீட்டி, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முன்வர வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றோம்.


நாட்டின் இன்றைய சூழ்நிலை –

பெரும்பான்மை வாக்குகளை பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள புதிய அரசு ஊழல்களை ஒழிக்கவும், போதைவஸ்தைக் கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை உறுதியாக்கவும் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியன.

ஆயினும் தமிழர் நில அபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் இந்த அரசு இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே இந்தச் சூழ்நிலையில் தமிழர் நலன் சார்ந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் ஏனைய அமைப்புக்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட தொடர்ந்து பற்றுறுதியோடு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.– என்றுள்ளது.

இந்த இறை மடலானது இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் காலை திருப்பலியின் போது மக்களுக்கு வாசிக்கப்பட்டது.







# வீ.எஸ்.கணநாதனின் நூல்கள் மெய்நிகர் வழியாக அறிமுகம்

ஆஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தின் வாசிப்பு அனுபவப் பகிர்வு நிகழ்ச்சி எதிர்வரும் வெள்ளிக் கிழமை, மாலை 7 மணிக்கு, மெய்நிகர் வழியாக நடைபெறவுள்ளது.

இந்தச் சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவரான, வீ.எஸ்.கணநாதனின், இரண்டு நூல்கள் இந்த நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளன.

ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் நடத்தும் வாசிப்பு அனுபவப்பகிர்வு வெள்ளிக்கிழமை நடைபெறும்.


மூத்த எழுத்தாளர் வீ.எஸ்.கணநாதன் எழுதிய இரு நூல்களின் மெய்நிகர் வாசிப்பு அனுபவப் பகிர்வு நிகழ்வின் தலைமை உரையை பாடும்மீன் ஸ்ரீகந்தராசா தொகுத்து வழங்கவுள்ளார்.

சத்தியம் மீறியபோது நூல் அனுபவப் பகிர்வை நோயல் நடேசனும், நிம்மதியைத் தேடி நூல் அனுபவப் பகிர்வை கிறிஸ்டி நல்லரெத்தினமும் வழங்குகிறார்.

இந்த நூல் குறித்த அனுபவப் பகிர்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் ஆஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

MEETING ID: 895382 66332,
PASSCODE: 627876

நிகழ்ச்சி நேரங்கள்: இந்தியா, இலங்கை – மதியம் 1:30 மணி, இங்கிலாந்து – காலை 8 மணி, பிரான்ஸ், ஜேர்மனி – காலை 9 மணி. கனடா – அதிகாலை 3 மணி.



# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பத்து நாள்களின் பின் சீரான மின்சாரம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பேரிடரால் தடைப்பட்டிருந்த மின்சாரம் பத்து நாள்களின் பின்னர் நேற்று மாலை வழமைக்குத் திரும்பியது.

அம்பாறை, மஹியங்கனை மற்றும் வவுணதீவு ஆகிய வலயங்களுக்கு தேவையான மின்சாரத்தை வழங்கத் தேவையான கோபுரத்தை அமைக்கும் பணியில் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் கடந்த ஒன்பது நாள்கள் இரவு பகல் பாராமல் ஈடுபட்டிருந்தனர்.

அதுவரைசுழற்சிமுறையில்நாளொன்றுக்கு ஒருமணிநேரம் முறை மாற்று அடிப்படையில் மின்சாரம் சில பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக குறித்த கோபுரம் முற்றாக சேதமடைந்திருந்தது.

இதனால் அம்பாறை, மஹியங்கனை மற்றும் வவுணதீவு ஆகிய வலயங்களுக்கான மின்சாரம் கடந்த 27ஆம் திகதியில் இருந்து ஒன்பது நாள்களாக தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரன்தம்பே, மஹியங்கனையில் இருந்த உயர் மின்னழுத்த இணைப்பின், 15 ஆவது கோபுரமே இந்த அனர்த்தத்தில் சுருண்டு வீழ்ந்தது.

அதனையடுத்து இலங்கை மின்சார சபை, சிரமங்களுக்கு மத்தியில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, சேதமடைந்த மின் பரிமாற்ற பாதையை சரிசெய்து, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகத்தை சீர்செய்யும் பணிகளை துரித கதியில் முன்னெடுத்திருந்தது.



சேதமடைந்த கோபுரத்துக்குப் பதிலாக புதிய கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு தடைப்பட்டிருந்த மின்சாரம் மீண்டும் கிடைத்ததில் மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

இதற்காக மக்கள் ஜனாதிபதிக்கும் இலங்கை மின்சார சபையினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.





# கோவா இரவு விடுதியில் தீ விபத்து; 3 பெண்கள் உட்பட 23 பேர் மரணம்

வடக்கு கோவாவில் உள்ள அப்போரா பகுதியில் அமைந்துள்ள கடற்கரையோர இரவு விடுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 23 பேர் உயிரிழந்தனர். விடுதியில் எரிவாயு சிலிண்டர் வெடித்த காரணத்தால் இந்த விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவில் சுற்றுலா பயணிகள் அதிகம் வந்து செல்லும் மாநிலங்களில் ஒன்று கோவா. அரபிக் கடலோரத்தில் அமைந்துள்ள இந்த மாநிலத்தில் போர்ச்சுகல் பாரம்பரிய கட்டடங்கள், கோட்டைகள், தேவாலயங்கள் மற்றும் இயற்கை எழிலுடன் கூடிய பல்வேறு கடற்கரை பகுதிகளை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பார்வையிடுவது வழக்கம்.

இந்த கடற்கரையோர பகுதிகளில் தங்கும் விடுதிகள், இரவு நேர கேளிக்கை விடுதிகள் அதிகம் அமைந்துள்ளன. நவம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரையிலான காலம் “சீசன் டைம்“ என உள்ளூர் மக்கள் சொல்வதுண்டு. நத்தார், புத்தாண்டு உள்ளிட்ட கொண்டாட்ட நாள்கள் இதில் அடங்குகின்றன.

இந்நிலையில், நேற்று சனிக்கிழமை நள்ளிரவு வடக்கு கோவாவின் அப்போரா பகுதியில் அமைந்துள்ள இரவு நேர விடுதி ஒன்றில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததால் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மொத்தம் 3 பெண்கள் உட்பட 23 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதியில் தீ கட்டுப்படுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களில் 3 முதல் 4 பேர் சுற்றுலா பயணிகள் என்றும், மற்றவர்கள் விடுதியின் சமையலறையில் பணியில் இருந்தவர்கள் என்றும் கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் தெரிவித்தார். 20 பேர் மூச்சுத் திணறல் காரணமாக உயிரிழந்தனர் என அவர் தெரிவித்தார்.

பொலிஸின் முதற்கட்ட விசாரணையில் தீ விபத்து சம்பவம் நிகழ்ந்த விடுதியில் பாதுகாப்பு வழிமுறைகள் முறையாக பின்பற்றப்படவில்லை என கண்டறிந்துள்ளனர்.

இந்நிலையில், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து விடுதிகளிலும் பாதுகாப்பு வழிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை தணிக்கை செய்ய வேண்டும் என பா.ஜ.க. எம்.எல்.ஏ. மைக்கேல் லோபா வலியுறுத்தி உள்ளார்.

கோவா இரவு நேர விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 23 பேர் உயிரிழந்த தகவல் அறிந்த பிரதமர் நரேந்திர மோடி மற்றும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஆகியோர் தங்களது இரங்கலை தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 2 லட்சம் இந்திய ரூபா நிவாரணம் அறிவித்துள்ளார் பிரதமர் மோடி.

கோவா இரவு நேர விடுதியில் ஏற்பட்டுள்ள இந்த தீ விபத்து சம்பவம் தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழகத்தில் ராமர் ஆட்சி மலரும்: நயினார் நாகேந்திரன் நம்பிக்கை



“தமிழகத்தில் ராமர் ஆட்சி மலரும். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இன்னும் நிறைய கட்சிகள் சேரும். நிச்சயம் எங்கள் கூட்டணி ஆட்சி அமைக்கும்.”

– இவ்வாறு தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

அம்பேத்கர் நினைவு நாளையொட்டி நேற்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் சென்னை பாரிமுனையில் இருந்து தொண்டர்களுடன் பேரணியாக நடந்து சென்று, ராஜாஜி சாலையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தை அயோத்தியாக மாற்ற பா.ஜ.க. முயற்சிக்கிறது. தமிழகத்தில் மதவாத அரசியல் எடுபடாது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி ஆகியோர் தெரிவித்த கருத்து குறித்து கேட்கிறீர்கள். அயோத்தி இந்தியாவில் தானே இருக்கிறது. அயோத்தி இங்கிலாந்து, ஐரோப்பாவில் இல்லையே.

அதனால், அயோத்தி போல தமிழகம் மாறுவதில் எந்தத் தவறும் இல்லை. நம் அனைவருக்கும் ராமரின் ஆட்சியை பற்றி தெரியும். தமிழகத்தில் ராமர் ஆட்சி மலரும். தேசிய ஜனநாயக கூட்டணி, ராமரின் ஆட்சியை தரும்.

திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற வேண்டும். அதேசமயம் பக்கத்தில் தர்கா இருப்பதும் அனைவருக்கும் தெரியும். எனவே, தர்கா அருகில் செல்லாமல், தீபத்தூணில் தான் தீபம் ஏற்ற வேண்டும் என நீதிபதி அனுமதி அளித்திருக்கிறார். தர்கா சம்பந்தப்பட்டவர்களோ, இஸ்லாமியர்களோ இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து பேச அவர்கள் விரும்பவில்லை. அதனால், அங்கே மதக் கலவரம் வருவதற்கு எந்த விதமான முகாந்திரமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், உதயநிதி ஸ்டாலின் சனாதன தர்மத்தை அழித்து விடுவோம் என கூறியிருக்கிறார். அதற்கான ஆரம்பக்கட்ட வேலையில் தற்போது அவர் ஈடுபடுவது தெரிகிறது. அவருடைய கனவு பலிக்காது.

எத்தனை யுகங்கள் ஆனாலும் சரி, சனாதன தர்மத்தை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. இன்னும் 100 நாள்கள் தான் இருக்கிறது. தி.மு.க. ஆட்சியின் நாள்கள் எண்ணப்படுகின்றன.

அமித் ஷா எப்போது வேண்டுமானாலும் தமிழகம் வருவார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நிறைய கட்சிகள் சேரும். நிச்சயம் எங்கள் கூட்டணி ஆட்சி அமைக்கும். தி.மு.க. கூட்டணியில் நிச்சயம் குழப்பம் இருக்கிறது. அதில் சந்தேகமே இல்லை.” என்று தெரிவித்தார்.




# சூடானில் பாடசாலை, மருத்துவமனை மீது ஆளில்லா விமானத் தாக்குதல்; 50 பேர் பலி

சூடானில் பாடசாலை மற்றும் மருத்துவமனை மீது ஆயுத குழுவினர் ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்திய தாக்குதலில் 33 சிறுவர்கள் உட்பட 50 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சூடானில் அந்நாட்டு இராணுவத் திற்கும், ரேபிட் சப்போர்ட் போர்சஸ் எனப்படும் ஆயுதமேந்திய குழுவின ருக்கும் சமீப காலமாக மோதல் இடம் பெற்று வருகிறது.

இந்த நிலையில் கோர்டோபான் மாகாணத்தில் உள்ள கலோகி நகரில் உள்ள ஒரு சிறுவர் பாடசாலை, மருத்துவமனை மீது ஆயுத குழுவான ரேபிட் சப்போர்ட் போர்சஸ், நேற்று இரவு ஆளில்லா விமானங்களை ஏவியது.

முன்னதாக, அந்த ஆயுத குழு வினர், சிறுவர் பாடசாலையைத் தாக்கினர்.

பின்னர் பொதுமக்கள் உணவுக் காக உதவி கோரி கூடியிருந்த இடத் தின் மீதும் இரண்டாவது தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதல்களின் போதே, 33 சிறுவர்கள் உட்பட, 50 பேர் கொல்லப்பட்டனர் என சூடான் மருத்துவ அமைப்பு தெரிவித்துள்ள தாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரி விக்கின்றன.






# பிரான்ஸில் நத்தார் நிகழ்ச்சியில் புகுந்த கார்; 10 பேர் உயிரிழப்பு

பிரான்ஸில் நத்தார் கொண்டாட்டத்தில் கார் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட குவாடலூப் தீவில் இடம்பெற்ற நத்தார் கொண்டாட்ட நிகழ்ச்சியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த தேவாலயத்திற்கு எதிரே உள்ள ஷோல்ச்சர் சதுக்கத்தில் இந்த நிகழ்ச்சிக்காக ஏராளமானோர் கூடியுள்ளனர்.

அப்போது கூட்டத்திற்குள் கார் ஒன்று அதிவேகமாக புகுந்த நிலையில் மக்கள் அலறியடித்து ஓடியுள்ளனர்.

இதையடுத்து, கூட்டத்திற்குள் கார் புகுந்ததில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

அத்தோடு, 9 பேர் காயம் அடைந்த நிலையில், தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் மீட்பு படையினர் விரைந்துள்ளனர்.

இதையடுத்து, காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இரவு நேரத்தில் உக்ரைன் படை நடத்திய ட்ரோன் தாக்குதலை முறியடித்தது ரஷ்யா

இரவு நேரத்தில் நடத்தப்பட்ட உக்ரைனிய ட்ரோன் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட சமீபத்திய தகவலின் படி, இரவு நேரத்தில் நடத்தப்பட்ட உக்ரைனிய ட்ரோன் தாக்குதல்கள் ரஷ்யாவின் பலமான வான் பாதுகாப்பு அமைப்புகளால் முறியடிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல ரஷ்ய பிராந்தியங்களை குறி வைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் மொத்தம் 77 உக்ரைனிய ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியான தகவலின் அடிப்படையில், சராடோவ் பிராந்தியத்தில் அதிகபட்சமாக 42 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

அதைப்போல ரோஸ்டோவ் பிராந்தியத்தில் 12 ட்ரோன்களும், கிரிமியன் தீபகற்பத்தில் 10 ட்ரோன்களும், வோல்கோரோட் பிராந்தியத்தில் 9 ட்ரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

மேலும், பெல்கோரோட், ஆஸ்ட்ராகான், செச்சினியா குடியரசு ஆகிய பிரதேசங்களும் உக்ரைனின் ட்ரோன் தாக்குதலுக்கு குறி வைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 07/12/2025

## கனடாவிலிருந்து இந்தியர்களை அமெரிக்காவுக்குக் கடத்தச் சதி பெண் மீது வழக்குப்பதிவு



C2



# கனடா எல்லைக்கு அருகே சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

வடஅமெரிக்காவின் அலாஸ்கா மற்றும் கனடா பிராந்தியத்திற்கு இடையே அமைந்துள்ள யுகோன் பகுதியில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க புவியியல் ஆய்வகத்தின் தகவல்படி, அலாஸ்காவின் ஜூனாவ் வில் இருந்து வடமேற்கே சுமார் 370 கிலோ மீற்றர் தொலைவிலும், கனடாவின் யூகோனின் வைட்ஹார்சுக்கு மேற்கே 250 கிலோ மீற்றர் தொலைவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இன்று காலை 7 மணியளவில், 7.0 ரிக்டர் அளவில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் வீடுகள் குலுங்கியதால், அச்சமடைந்த மக்கள் உடனடியாக வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரம் தற்போது வரை வெளியாகவில்லை.

சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டாலும் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது.

# 2.7 பில்லியன் டொலர் மதிப்பிலான குண்டுகளை கனடாவிற்கு விற்பனை செய்யும் அமெரிக்கா

அமெரிக்கா, கனடாவிற்கு 2.7 பில்லியன் டொலர் மதிப்பிலான விமான தாக்குதல் ஆயுதங்களை விற்பனை செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

C3









# தங்கள் காதல் உறவை உத்தியோகபூர்வமாக அறிவித்தனர் ஜஸ்டின் ட்ரூடோ, கேற்றி பெர்ரி

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் அமெரிக்க பாடகி கேற்றி பெர்ரியும் தங்கள் உறவை உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

இந்த வாரம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடா மற்றும் அவரது மனைவி யூகோவுடன் இணைந்து இருவரும் மதிய உணவு விருந்தில் கலந்துகொண்டுள்ளனர்.

வெளியான புகைப்படம் ஒன்றில், இரு தம்பதிகளும் ஒரு நத்தார் மரத்திற்கு முன்னால் நின்று புகைப்படத்திற்கு முகம் காட்டுகின்றனர். சமூக ஊடகத்தில் ஃபுமியோ கிஷிடாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார் ட்ரூடோ,

கேற்றி மற்றும் தாமும் உங்களுடனும் யூகோவுடனும் விருந்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி என ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஃபுமியோ, உங்கள் நட்புக்கும், சர்வதேச விதிகள் சார்ந்த ஒழுங்கு மற்றும் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்திற்கான உங்கள் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கும் நன்றி எனவும் ட்ரூடோ பதிவு செய்துள்ளார்.

ஜூலை மாதத்தில் வதந்திகள் பரவத் தொடங்கியதிலிருந்து, ட்ரூடோ மற்றும் கேற்றியின் உறவு நிலை குறித்த உறுதிப்படுத்தலுக்கு மிக நெருக்கமான விடயம் இந்த ஜப்பான் சந்திப்பு என்றே கூறப்படுகிறது.

டோக்கியோவில் ட்ரூடோவும் பெர்ரியும் கைகோர்த்து நிற்கும் புகைப்படங்களும் கவனத்தை ஈர்த்து வருகின்றன. முன்னாள் கனேடிய பிரதமர் தனது சிறந்த வாழ்க்கையை தற்போது வாழ்ந்து வருகின்றார் என சமூக ஊடக பயனர்கள் கூறுகின்றனர்.




# கனடாவிலிருந்து இந்தியர்களை அமெரிக்காவுக்குக் கடத்தச் சதி

## பெண் மீது வழக்குப்பதிவு

கனடாவிலிருந்து இந்தியர்களை அமெரிக்காவுக்கு ஆள்கடத்த சர்வதேச அளவில் சதித்திட்டம் தீட்டிய பெண் மீது வழக்குப்பதியப்பட்டுள்ளது.

கனடாவிலிருந்து 4 இந்தியர்கள் உள்பட மொத்தம் 5 பேர் சட்ட விரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்த விவகாரம் அமெரிக்க அதிகாரிகளுக்கு தெரிய வந்ததையடுத்து, அமெரிக்காவுக்குள் இந்தியர்கள் சட்ட விரோதமாக நுழைய டெய்லர் என்ற நியூயோர்க் பெண் உதவினார் என முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

அதன்பேரில், கடந்த ஜனவரியில் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சர்வதேச அளவில் ஆள் கடத்தலில் ஈடுபடும் கும்பலுடன் அவருக்கு தொடர்பிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கின் விசாரணை அமெரிக்க நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், டெய்லர் மீதான குற்றச்சாட்டு நிரூபனமானால் அவருக்கு குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை உறுதி என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கில், கனடாவிலிருந்து ஆள் கடத்தப்பட்ட இந்தியர்கள் சட்ட விரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்தது எப்படி? அவர்களின் வொவரங்கள் உள்ளிட்ட விரிவான பல தகவல்களை அதிகாரிகள் வெளியிடவில்லை.



# 2.7 பில்லியன் டொலர் மதிப்பிலான குண்டுகளை கனடாவிற்கு விற்பனை செய்யும் அமெரிக்கா

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தத்தில் 3,414 BLU-111 குண்டுகள் (ஒவ்வொன்றும் 500 பவுண்ட் எடையுடையவை) மற்றும் 3,108 புடீரு–39 குண்டுகள் அடங்கும்.

BLU-111 குண்டுகள் எதிரி படையினரை தாக்க பயன்படுத்தப்படுகின்றன. புடீரு–39 குண்டுகள் நிலையான இலக்குகளை மிகுந்த துல்லியத்துடன் தாக்கும் திறன் கொண்டவை.

மேலும், 5,000–க்கும் மேற்பட்ட துனுயுஆ முவை–கள் இதில் அடங்குகின்றன. இவை பழைய குண்டுகளை smart guided bombs–ஆக மாற்றும் தொழில்நுட்பம் கொண்டவை.

அமெரிக்க வெளியுறவு அமைச்சகம், இந்த விற்பனை கனடாவின் பாதுகாப்புத் திறனை மேம்படுத்தும் என்றும், அமெரிக்க படைகளுடன் இணைந்து செயல்படும் திறனை வலுப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளது.

“இந்த ஒப்பந்தம், பிராந்தியத்தில் தாக்குதலைத் தடுக்க கனடாவின் நம்பகமான பாதுகாப்புத் திறனை உயர்த்தும்” என அதிகாரப்பூர்வ அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

கனடா பிரதமர் மார்க் கார்னி, நாட்டின் பாதுகாப்பு செலவுகளை அதிகரிக்க உறுதியளித்துள்ளார். அவர், இந்த ஆண்டுக்குள் யேவுழ இலக்கான GDP-இன் 2 சதவீதம் பாதுகாப்பு செலவினை நிறைவேற்றுவோம் என அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப், யேவுழ கூட்டாளிகள் அமெரிக்காவை அதிகம் சார்ந்துள்ளனர் என விமர்சித்து வந்தார். கடந்த காலத்தில் கனடாவை “அமெரிக்காவின் 51வது மாநிலம்” எனக் கேலி செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

